25.02.2025

OS No: 548/2019

வா.சா.1 திரு. நாச்சியப்பன் , த/பெ. சண்முகம்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணம் தயார் செய்திட விபரம் சொன்னவர் யார் தேவி தான் விவரம் சொன்னார். வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 3ல் பாக்கி ரூ.50,000/- 1வது பார்ட்டி இன்று முதல் ஒரு வருட தவணைக்குள் 2வது பார்ட்டிக்கு செலுத்த தயாராக இருப்பதன்பேரில் என சங்கதி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் காலமானது 09.08.2016 முடிவடைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒரு வருடகாலத்திற்குள் பாக்கி கிரையத் தொகையான ரூ.50,000/-ஐ நான் வைத்திருந்தேன் என்பதற்கோ, பிரதிவாதியிடம் செலுத்த தயார் நிலையில் இருந்தேன் என்பதற்கோ எடுத்துக்காட்டிட ஆவணம் எதுவும் தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவியின் கணவர் மீது தாவா வழக்கைப் போல் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு எப்போது தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2017ல் தாக்கல் செய்தேன். பிரதிவாதி தேவியின் கணவர் மணியரசன் மூலமாகத்தான் தாவா வழக்கின் பிரதிவாதி தேவியை தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி தேவி எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரமும் அவரது கணவர் மணியரசன் எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரமும் ஒரே தேதியில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா வழக்கின் கிரைய ஒப்பந்த பத்திரமானது 10.08.2015ல் ஏற்பட்டது, மணியரசன் எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் 6வது மாதம் 2015ம் வருடமாகும், தேதி ஞாபகமில்லை.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக கால அவகாசம் வழங்கி ஒத்திவைக்கப்படுகிறது.**

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.02.25 17:03:05 +0530